IN THE COURT OF SUBORDINATE JUDGE, ARAKKONAM.

**HMOP 133/2021**

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1 |
| பெயர் | : | ரேவந்த் |
| தந்தை பெயர் | : | பாஸ்கரன் |

Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 16.04.2024.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** தொடர்ச்சி

நான் என் பிராமண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பி இருந்தேன் என்றால் சரிதான். ஆனால் சேர்ந்து வாழ்வதற்கு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நான் இன்று வரை எதிர்மனுதாரருக்கோ, என் குழந்தைக்கோ பராமரிப்பு செலவோ, மருத்துவ செலவோ செய்தததில்லை என்றால் சரிதான் குழந்தையை என்னிடம் காட்டவில்லை. குழந்தையை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எதிர்மனுதாரர் MC வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பிறகு என் பெற்றோர் மற்றும் சகோதரிகளுடன் சேர்ந்துதான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. மனுவிலோ அல்லது பிராமண வாக்குமூலத்திலோ திருமணத்திற்கு பிறகு தனி குடுத்தனம் இருந்தோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. MC வழக்கை தவிர எதிர்மனுதாரர் வேற எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் என்னையும் என் குடும்பத்தாரயையும்

எதிர்மனுதாரர் மிரட்டும் நோக்கத்தில் பல தவறான வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த மாதத்தில் சமரசம் பேசப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் வீட்டு பெரியோர்களை அழைத்து சென்ற போது வீட்டு மாப்பிள்ளை என்று பாராமல் என்னை தாக்கி வெளியே தள்ளினார் என்று சொல்லியுள்ளீர்கள் யார் தாக்கினார் என்று சொல்லவில்லை என்று சொல்லினால் சரிதான். 25.08.2021 அன்று நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிர்மனுதாரர் என்னை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் துன்புறுத்தினார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் என் வீட்டில் விட்டு சென்ற சீர்வரிசை பொருள்களின் மதிப்பு எனக்கு தெரியாது. நான் வேறொரு வசதி படைத்த பெண்ணை திருமணம் செய்துகொள்ள வேண்டி தான் நானும் என் பெற்றோரும் எதிர்மனுதாரரை வீட்டை விட்டு அனுப்பினோம் என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லை என்றால் இம்மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழாமல் அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார், கூப்பிட்டும் வரவில்லை. அதனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் சேர்ந்து வாழ்வதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் திட்டமிட்டு விவாகரத்தை பெற வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ்வதற்கு பல முறை முயற்சி எடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டத்திற்கு உட்பட்டது இல்லை என்றும் அதனால் இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(குறுக்குவிசாரணை முடிவுற்றது.)